# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2015 யு‘லை

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

---

**<u>பொதுவான கருத்துக்கள்</u>**

இந்த வினாத்தாளுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரியானது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நடைமுறை அம்சங்கள் தொடர்பான இந்த வினாத்தாளுக்கு குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் பாடத்திட்டத்தில் ஆழமான அறிவு அற்றவர்களாகவும் கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி அற்றவர்களாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. பரீட்சார்த்திகள், பாடத்திட்ட நோக்கெல்லையினுள்ளேயே பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்படுகிறது என்பதையும் பாடத்திட்டத்தை முறையாகப் பயிலும் பரீட்சார்த்திகள் அதிக கஷ்டங்கள் இன்றி இந்த வினாத்தாள் ஊடாக புள்ளிகளைப் பெற முடியும் என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

வரைவிலக்கணங்களுடன் கூடிய செயல் வினைச் சொல் நிரல் ஒன்று இந்த வினாத்தாளுடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச் சொல்லை உள்ளடக்கியுள்ளது. பரீட்சார்த்திகள் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஆயினும், வினைச் சொல்லில் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பது தொடர்பில் பரீட்சார்த்திகள் போதுமானளவு கவனம் செலுத்தியிராமை அவதானிக்கப்படடது. வினைச்சொற்கள் பற்றிய நல்ல அறிவைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமாகும். உதாரணம் : பரீட்சகர் ‘‘கூறுக’’ எனக் கேட்கும்போது அங்கு ஏதாவதொன்றை நிச்சயமாக அல்லது தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்பதும் நீண்ட விளக்கங்களை வழங்கத் தேவையில்லை என்பதும் எதிர்பார்க்கப்படுகிறது. பரீட்சார்த்திகள் தேவையற்ற விபரமான விளக்கங்களைத் தருவதற்கு முனையும்போது அவர்களது நேரம் விரயமாவதுடன் நேர மட்டுப்பாடு காரணமாக ஏனைய வினாக்களுக்கான புள்ளிகளைப் பெற முடியாமலும் போகிறது.

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

**வினா இல. 01** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா 02 உப பிரிவுகளைக் உள்ளடக்கியுள்ளதுடன், உறுதிப்பாட்டு ஈடுபாட்டில் சம்பந்தப்பட்ட மூன்று தரப்பினர்கள் குறித்தான அறிவு பகுதி (a) இன் மூலம் பரீட்சிக்கப்பட்டிருந் ததுடன், பகுதி (b) இன் மூலம் ஒழுக்கநெறிக் கோவையின் அடிப்படைத் தத்துவங்கள் மீதான அறிவும் பரீட்சிக்கப்பட்டது.

இந்த வினாவுக்கான செயலாற்றுகை ஓரளவு திருப்திகரமானதாக இருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பங்குதாரர்கள், உள்ளகக் கணக்காய்வாளர், நிதி அலுவலர் போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

மேலும், ‘‘அடையாளங் காணுதல்’’ என்ற வினைச்சொல் பற்றிய எந்தவொரு திட்டமும் இன்றி, பரீட்சார்த்திகள் முதலாவது பகுதிக்காகவும் அதேபோல் ஒழுக்கநெறிக் கோவைப் பகுதிக்கும் விபரமான விளக்கங்களை வழங்கியிருந்தனர்.

**வினா இல. 02** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா பகுதி (a) இன் மூலம் ஒரு கணக்காய்வு வாடிக்கையாளரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஈடுபடுத்தல் கடிதம் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் மீதான கோட்பாட்டு அறிவையும் பகுதி (b) இன் மூலம் ஒரு நிரந்தர கணக்காய்வுக் கோப்பில் உள்ளடக்கப்படும் வேறு தகவல்கள் பற்றிய அறிவையும் பரீட்சித்துள்ளது.

பகுதி (a) இற்காக, விரல்விட்டு எண்ணக்கூடிய சில பரீட்சார்த்திகள் மட்டுமே ஈடுபடுத்தல் கடிதம் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று விடயங்களைச் சரியாகக் குறிப்பிட்டிருந்ததுடன் இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியற்றதாக அமைந்திருந்தது. பரீட்சார்த்திகள் ஈடுபடுத்தல் கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை வழங்கியிருந்தனர் ஆயினும் அவர்கள் **கணக்காய்வு ஆட்சேர்ப்பு ஒன்றிற்கான ஈடுபடுத்தல் கடிதம் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை வழங்கியிருக்கவில்லை.** அதிகளவான விடைகள் தொடர்பில்லாதவைகளாகவே காணப்பட்டன. அறிக்கைத் திகதி, கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகை, கணக்காய்வு அறிக்கையின் மாதிரி போன்றவை அத்தகைய விடைகளுக்கு உதாரணங்களாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் கணக்காய்வு ஆட்சேர்ப்பு ஒன்றிற்கான ஈடுபடுத்தல் கடிதமொன்று பற்றிய முறையான அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதையே மேலுள்ள குறைபாடுகள் உறுதிப்படுத்துகின்றன.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்கு நிரந்தரக் கணக்காய்வுக் கோப்பொன்றில் உள்ளடக்கப்படும் ஏனைய தகவல்களைக் குறிப்பிட்டு அதற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பல பரீட்சார்த்திகள் நிரந்தரக் கணக்காய்வுப் கோப்பில் உள்ளடக்கப்படும் தகவல்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக நடைமுறைக் கணக்காய்வுக் கோப்பில் உள்ளடக்கப்படும் தகவல்களைக் குறிப்பிட்டிருந்ததால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

**வினா இல. 03** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவின் பகுதி (a) இல், கணக்காய்வுச் சான்றுகளின் நம்பகத் தன்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய கோட்பாட்டு அறிவு பரீட்சிக்கப்பட்டதுடன் பகுதி (b) இல், சாத்தியமான உறவுமுறைத் தரப்பினரின் ஊடுசெயல்களை இனங்காண்பதற்கு ஒரு கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய நடைமுறைகளும் பரீட்சிக்கப்பட்டன.

இந்த வினாவின் பகுதி (a) இற்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்ததுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் கணக்காய்வுச் சான்றுகளின் நம்பகத்தன்மையில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள் இரண்டினைச் சரியாகக் குறிப்பிட்டதன் மூலம் முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பகுதி (b) இற்காக, பல பரீட்சார்த்திகள் சாத்தியமான உறவுமுறைத் தரப்பினரின் ஊடு செயல்களை இனங்காண்பதற்கு ஒரு கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய மூன்று நடை முறைகளைச் சரியாகக் குறிப்பிட்டிருக்கவில்லை. அதிகமான பரீட்சார்த்திகள், உறுதிப்படுத்தல் களுக்கான அழைப்புகள், கண்காணிப்புகள், மீள் செயலாற்றுகை, பகுப்பாய்வு நடைமுறைகள் போன்ற கணக்காய்வு ஆதாரங்களைத் திரட்டும் முறைகளை வழங்கியிருந்தனர். மேலும், பரீட்சார்த்திகள் கணக்காய்வு நடைமுறைகளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக கணக்காய்வு ஆதாரங்களில் போதுமானதும் பொருத்தமானதுமான விடயங்கள் பற்றிய விளக்கங்களை வழங்கியிருந்தனர். பரீட்சார்த்திகள் உறவுமுறைத் தரப்பினரது ஊடுசெயல்களின் கணக்காய்வு நடைமுறைகள் பற்றி போதுமான அறிவினைக் கொண்டிருக்காமையை இது புலப்படுத்துகிறது.

**வினா இல. 04** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவின் பகுதி (a) இல் GT ஹோல்டிங் PLC இன் துறைசார்ந்த, ஒழுங்குபடுத்தும் மற்றும் பிற வெளிவாரிக் காரணிகளின் கீழ் கணக்காய்வாளர் ஒருவர் அறிவினைப் பெற வேண்டிய பொதுவான விடயங்கள் பற்றிய கோட்பாட்டு அறிவு பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன் பகுதி (b) இல் கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகள் பரீட்சிக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தத்தில் இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக அமையவில்லை.

பகுதி (a) இற்காக, பரீட்சார்த்திகள் தகவல் தொழினுட்பவியல், கணக்காய்வுச் சூழல், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை போன்ற சம்பந்தமில்லாத விடைகளை வழங்கியிருந்தனர். இங்கு கணக்காய்வு முகாமையாளர் ஒருவர் துறைசார்ந்த, ஒழுங்குபடுத்தும் மற்றும் பிற வெளிவாரிக் காரணிகளின் கீழ் அறிவினைப் பெற வேண்டிய பொதுவான விடயங்கள் பற்றியே கேட்கப்பட்டிருந்தது.

மேலும் இந்த வினாவின் பகுதி (b) இற்கு, சில பரீட்சார்த்திகளைத் தவிர, அதிகளவான பரீட்சார்த்திகள் கணக்காய்வுக் குழு என்பதனால் கருதப்படுவது யாது என்பது பற்றிய எந்தவிதமான விளக்கங்களையும் கொண்டிருக்கவில்லை. பரீட்சார்த்திகள் கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகளாக வெளிவாரியான கணக்காய்வின் கணக்காய்வு நடைமுறைகளை அடையாளங் கண்டிருந்தனர். எனவே, இதன் விளைவாக அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த இலகுவான வினாவுக்கு குறைந்த புள்ளிகளையே பெற்றனர். இது, பரீட்சார்த்திகள் கணக்காய்வுச் செயன்முறை மற்றும் நிறுவன ஆளுமை தொடர்பான தங்களது அறிவினை வலுப்படுத்த வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

## <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

**வினா இல. 05** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இது **பாஷன் ரெண்ட் (தனி.) கம்பனி** பற்றிய விவரண அடிப்படையிலமைந்த வினாவாகும். இது மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருக்கிறது. இங்கு பகுதி (a) இல் உரிமம் ஒன்றில் மோசடி இடரில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய புறநிலைகள் அல்லது நிகழ்வுகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவையும் பகுதி (b) இல் மோசடி ஒன்றைப் பொறுத்தமட்டில் கணக்காய்வாளரின் பொறுப்பையும் பகுதி (c) யில் சம்பளங்களின் குறைவான அல்லது அதிகமான வழங்கலால் ஏற்படும் இடரைத் தணிப்பதற்காக நடைமுறைப்படுத்துவதற்கு கருத்திற் கொள்ளக்கூடியதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றையும் பரீட்சகர் பரீட்சித்துள்ளார்.

இந்த வினாவின் பகுதி (a) இற்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தினை விடவும் குறைவான தாகும். பகுதி (a) இற்காக, சட்டச் சிக்கல்கள், போதிய அறிவின்மை போன்ற சில பிழையான விடைகளும் அவதானிக்கப்பட்டன.

சில பரீட்சார்த்திகள், மோசடி ஒன்றைப் பொறுத்தமட்டில் கணக்காய்வாளரின் பொறுப்புகள் தொடர்பாக கேட்கப்பட்ட வினாவின் பகுதி (b) இற்கு விடையளிக்கும்போது மோசடிகளை அடையாளம் காண்பதில் கணக்காய்வாளர் பொறுப்புடையவர் எனப் பிழையாகக் குறிப்பிட்டி ருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் மோசடி ஒன்றைப் பொறுத்தமட்டில் கணக்காய்வாளரின் பொறுப்புகள் பற்றிய துல்லியமான மற்றும் தீர்மானமான அறிவினை கொண்டிருக்க வேண்டும்.

பகுதி (c) யில், சம்பளங்களின் குறைவான அல்லது அதிகமான வழங்கலால் ஏற்படும் இடரைத் தணிப்பதற்காக நடைமுறைப்படுத்துவதற்கு கருத்திற் கொள்ளக்கூடியதான கட்டுப்பாடுகளை அடையாளம் காணுமாறு வினாவில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் வினாவினை விளங்கிக் கொள்ளாது விடையளித்திருந்தனர்.

உதாரணமாக, அவர்கள் சம்பளச் சரிபார்ப்பின் நடைமுறைகள், அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள் போன்ற சம்பளப் பட்டியலிலுள்ள விபரங்களை தனிநபர்க் கோப்புகளுடன் சரிபார்த்தல், EPF, ETF கணிப்பீடுகள் போன்றவற்றின் துல்லியத் தன்மையினைச் சரிபார்த்தல் போன்றவற்றை வழங்கியிருந்தனர்.

**வினா இல. 06** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினாவின் பகுதி (a) ஆனது, தொழில்சார் சந்தேகம் மற்றும் தொழில்சார் சுய தீர்மானம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு தொடர்பிலான பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு அறிவையும் பகுதி (b) ஆனது, இறுதித் தொக்கின் மதிப்பீட்டு உறுதிப்பாடு தொடர்பாக கணக்காய்வாளர் ஆற்ற வேண்டிய கணக்காய்வு நடைமுறைகள் தொடர்பான அறிவையும் பரீட்சித்துள்ளது.

சில பரீட்சார்த்திகள் இந்த வினாவின் பகுதி (a) யிற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க விடைகளை வழங்கியிருந்தனர். பரீட்சார்த்திகள் தொழில்சார் சந்தேகம் என்பது கேள்வி கேட்கும் மனநிலையை உள்ளடக்கிய ஒரு மனோபாவம் ஆகும் எனச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். தொழில்சார் சுய தீர்மானத்திலிருந்து தொழில்சார் சந்தேகத்தை வேறுபடுத்தும்போது வழு அல்லது மோசடி காரணமான பிறள் கூற்றின் சாத்தியத் தன்மையை சுட்டிக்காட்டக்கூடிய புறநிலைகளில் விழிப்பாக இருத்தல் வேண்டும். ஆனால் சில பரீட்சார்த்திகள் தொழில்சார் சந்தேகம் என்பது தொழில்சார் சுய தீர்மானத்திற்கான அடிப்படை, தொழில்சார் சந்தேகம் நிறுவனத்தின் கடந்தகால நிகழ்வுகளுடன் தொடர்புடையது, தொழில்சார் சுய தீர்மானம் எதிர்கால கணக்காய்வு நடைமுறைகளின் திட்டமிடலுடன் தொடர்புடையது என்பன போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

இறுதித் தொக்கின் மதிப்பீட்டு உறுதிப்பாடு தொடர்பாக கணக்காய்வாளர் ஆற்ற வேண்டிய கணக்காய்வு நடைமுறைகள் இரண்டினை (02) விளக்குமாறு கேட்கப்பட்ட இந்த வினாவின் பகுதி (b) இனை அதிகளவான பரீட்சார்த்திகள் விளங்கிக் கொண்டிருக்கவில்லை. இத்தகைய பரீட்சார்த்திகள் தொக்குச் சரிபார்ப்பு நடைமுறையினை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொக்குச் சரிபார்ப்பு நடைமுறை பற்றிய விபரங்களை ஒரு பக்கத்திற்கும் மேலாக எழுதி, அவர்களது நேரத்தினை வீணடித்திருந்தனர்.

மிகச் சொற்பளவிலான பரீட்சார்த்திகள் இந்த விடைக்கான பிரதான விடயங்களைக் குறிப்பிட்டிருந்தனர். அந்தத் தொக்குகள், குறைந்த கிரயத்தில் அல்லது நிகர தேறுகைப் பெறுமதியில் (NRV) மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**வினா இல. 07** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

பகுதி (b) ஐத் தவிர இந்த வினாவும்கூட கோட்பாட்டு அறிவையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்த வினாவின் பகுதி (a) இல் கம்பனியின் ஒரு கணக்காய்வாளராக நியமனம் பெறுவதற்கு தகைமையற்ற நபர்கள் மற்றும் கம்பனியின் முதலாவது கணக்காய்வாளரை நியமிக்கும் செயன்முறை ஆகியன தொடர்பாக பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சகர் சோதித்துள்ளார்.

இந்த வினா தொடர்பில், விடையளிப்பதற்கு ஒரு வழிகாட்டியாக கம்பனிகள் சட்டம் தரப்பட்டிருந்தது. ஆனால் சில பரீட்சார்த்திகள் வங்குரோத்து நிலையிலுள்ள நபர், புத்தி சுயாதீனமற்ற நபர், துர்நடத்தையுள்ள நபர் என்பன போன்ற சம்பந்தமில்லாத விடைகளை வழங்கியிருந்தனர். இத்தகைய சம்பந்தமில்லாத விடைகளை வழங்கியிருந்த பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. பெரும்பாலானவர்கள் இத்தகைய கோட்பாட்டு அம்சங்களில் ஒரு நிறுவனம் பற்றிய அறிவின்றி பெரும்பாலானவர்கள் விடையளித்திருந்தமை மேலே காட்டப்பட்ட குறைபாடு மூலம் நிரூபிக்கப்படுகிறது.

இந்த வினாவின் பகுதி (b) ஆனது, தரப்பட்ட பிரித்தெடுப்பில் வழங்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகையை அடையாளங் காணவும் தரப்பட்ட அத்தகைய அபிப்பிராயத்திற்கான சாத்தியமான காரணங்களை விளக்கும்படியும் கோரியிருந்தது. விடை தகைமை பெற்ற கணக்காய்வு அபிப்பிராயம் ஆகும் என்பது இலகுவானதாக இருக்கிறது. இது ஏனெனில் கணக்காய்வாளர் தாமதமாக நியமனம் செய்யப்பட்டதன் விளைவாக அவரால் போதுமானளவு கணக்காய்வு ஆதாரங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றபடியால் ஒரு தகைமைபெற்ற அபிப்பிராயம் வழங்கப்படுகிறது. பரீட்சார்த்திகளிடமிருந்து இதன் அடிப்படையில் அமைந்த விளக்கங்களே எதிர்பார்க்கப்பட்டன. ஆனால், சில பரீட்சார்த்திகள் கணக்காய்வு அபிப்பிராயங்களின் வகைகளை எழுதி கணக்காய்வு அபிப்பிராயங்கள் தொடர்பில் சம்பந்த மில்லாத விடயங்களை விளக்கியிருந்தனர். இத்தகைய பரீட்சார்த்திகள் தங்களது நேரத்தை வீணடித்திருந்ததன் விளைவாக குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

## <u>பகுதி C</u>

ஏதாவது இரண்டு (02) வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல்

**வினா இல. 08** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இந்த வினா கோட்பாட்டு மற்றும் நடைமுறை அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்த வினாவின் பகுதி (a), உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைச் சட்டகத்தின் ஐந்து ஆக்கக்கூறுகளைச் சோதிப்பதற்கு எதிர்பார்த்தது. மற்றைய வினாக்களுடன் ஒப்பிடுகையில், பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் அரைவாசிக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் தந்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் காசு முகாமைத்துவச் செயன்முறை, சம்பளப் பட்டியல் தயாரிப்புச் செயன் முறை, தொக்கு முகாமைத்துவச் செயன்முறை, நிரந்தரச் சொத்துக்கள் முகாமைத்துவச் செயன்முறை, பகுப்பாய்வு நடைமுறைகள் போன்ற சம்பந்தமில்லாத விடைகளைத் தந்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் இந்த வினாவின் பகுதி (b) இல் தேவைப்படுத்தப்பட்டதான பெறுகைச் செயன்முறை ஒன்றில் காணப்படுகின்ற மூன்று இடர்களை அடையாளங் காணுதல் மற்றும் அடையாளங் காணப்பட்ட இடர்கள் ஒவ்வொன்றையும் தணிப்பதற்குச் சாத்தியமான கட்டுப் பாடுகள் ஆகியன தொடர்பில் விளங்கிக்கொள்ளவில்லை. அவர்கள் கணக்காய்வு இடர்களின் ஆக்கக்கூறுகள் போன்ற பிழையான விடைகளைத் தந்திருந்தனர். இத்தகைய பிழையான விடைகளைத் தந்திருந்தமை மட்டுமன்றி இந்த வினாவுடன் தொடர்பில்லாத உள்ளார்ந்த இடர், கட்டுப்பாட்டு இடர் மற்றும் கண்டுபிடித்தல் இடர் ஆகியவற்றை விபரமாக விளக்கு வதற்கு நேரத்தையும்கூட செலவிட்டிருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவின் பகுதி (c) (i) இற்கு நல்லவிதமாகப் விடை அளித்திருந்தனர். அதிகமான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை அடையாளங் கண்டிருந்தனர். இங்கு அத்தகைய பலவீனங்கள் தொடர்பில் விளக்குவதற்கு தேவைப்படுத்தப்படாத போதிலும் பரீட்சார்த்திகள் அவற்றை விளக்குவதற்கு முயற்சித்திருந்தமை பொதுவான ஒரு தவறாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், இத்தகைய பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பல பரீட்சார்த்திகள் இந்தப் பகுதியினை முழுமையாக விளங்கிக் கொள்ளாமல், உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களாக முறைமையில் உள்ளடக்கப்படாத வழக்கமற்ற பரிமாற்றங்கள் (ஊடுசெயல்கள்), மனித வழுக்கள், கூட்டுச்சதி போன்றவற்றை வழங்கியிருந்தனர்.

இந்த வினாவின் பகுதி (c) (i) இற்கு நன்றாக விடையளித்த பரீட்சார்த்திகள் பகுதி (c) (ii) இற்கும்கூட நன்றாகவே விடையளித்திருந்தனர். முதலாவது பகுதியினைச் சரியான முறையில் விளங்கிக் கொள்ளாத பரீட்சார்த்திகள் புள்ளிகளை பெறாததுடன் இரண்டாவது பகுதிக்கும்கூட புள்ளிகளைப் பெறவில்லை.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (c) (iii) இற்கு விடையளிக்க முனைப்புக் காட்டாமை அவதானிக்கப்பட்டது. சிறு தொகைப் பரீட்சார்த்திகள் தடுத்தல் கட்டுப்பாடுகளுக்கான உதாரணங்களைக் குறிப்பிட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. அநேகமாக எல்லாப் பரீட்சார்த்திகளும் கண்டுபிடித்தற் கட்டுப்பாடுகள் பற்றி எந்தவொரு திட்டத்தினையும் கொண்டிருக்கவில்லை.

**வினா இல. 09** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இந்த வினாவும் கோட்பாடு மற்றும் நடைமுறை அம்சங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கி யிருந்தது. மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை மிகவும் குறைவானதாகவே இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், பரீட்சார்த்திகள் பகுதி (c) இல் தரப்பட்ட மூன்று வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்கான தேர்வு வழங்கப்பட்டதனாலும் இந்த வினாவுக்கு விடையளிக்க முன்வரவில்லை.

இங்கு பகுதி (a) இன் கீழ் தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றின் மூலக்கூறுகள் தொடர்பான அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் தரக் கட்டுப்பாட்டு முறைமையினை உற்பத்தி வரிசையின் தரக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையாக விளங்கிக் கொண்டிருந்ததன் காரணமாக கணக்காய்வு ஒன்றின் தரக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு மிகக் குறைவாக இருந்தது. உற்பத்தித் தரவு, தயாரிப்புத் தரவு மற்றும் பொதியிடல் தரவு ஆகியவற்றைச் சோதித்தல், உற்பத்தி நிறைவு வரிசையின் தரத்தினை மேம்படுத்தல், அறிவார்ந்த மேற்பார்வையாளர்களைப் பயன்படுத்தல், தரம்மிக்க முகாமையாளர்கள், ISO சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல் போன்ற சம்பந்தமற்ற விடைகள் அதிகளவில் காணப்பட்டன. தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூலக்கூறுகளை விளக்குவதில் பரீட்சார்த்திகளால் குறைந்த அறிவு வெளிக்காட்டப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

பகுதி (b) (i) இன் கீழ் உரிமம் ஒன்றில் IT பொதுக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் நோக்கங்களை விளக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. உள்ளகக் கட்டுப்பாடுகளின் ஒட்டுமொத்த நோக்கங்கள் அடையப்பட்டதை உறுதிப்பாட்டின் நியாயமான மட்டத்தில் வழங்குவதற்காக கணினி தகவல் முறைமையின் நடவடிக்கைகளுக்கு மேலாக ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின் சட்டகத்தினை தாபிப்பதே, IT பொதுக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் நோக்கமாக எதிர்பார்க்கப்பட்ட விடையாக இருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள், சகல தரவுகளும் தீர்மானம் எடுத்தல் செயன்முறைக்காகச் சகல தரவுகளும் கிடைக்கக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்தல், வழுக்களைக் குறைத்தல், மேற்பார்வையை அதிகரித்தல் போன்ற பு‘ரணமற்றதும் பொதுப்படையானதுமான விடைகளை எழுதியிருந்தனர்.

பகுதி (b) (ii) இன் கீழ், கணினி நிரல்களுக்கு அதிகாரமற்ற மாற்றங்களைக் தடுப்பதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்கு ஒரு நிறுவனம் கருத்திற் கொள்ளுகின்ற கட்டுப்பாடுகள் பற்றிய நடைமுறை அறிவு பரீட்சிக்கப்பட்டதுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் கட்டுப்பாடுகளை அணுகுதல், கடவுச்சொல் பாதுகாப்புப் போன்றவற்றை குறிப்பிட்டிருந்ததுடன் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

இந்த வினாவுக்கு விடையளித்த பெரும்பாலான பரீட்சார்த்திகள் Design Furniture (Pvt) Ltd. பற்றிய விவரண வகையிலமைந்த வினாவான பகுதி (c) யிற்கு விடையளிக்காது விட்டிருந்தனர். பகுதி (c) (i) இல், தரப்பட்ட விவரணத்தை அடிப்படையாகக் கொண்டு பொருண்மையான பிறள் கூற்று இடர்களை அடையாளங் கண்டு மதிப்பிடுவதற்கான ஐந்து இடர் மதிப்பீட்டு நடைமுறைகளை எழுதுவதற்குக் கோரப்பட்டிருந்தது. பகுதி (c) யிற்கு விடையளித்த பரீட்சார்த்திகள் இந்த வினாவை விளங்கிக் கொள்ளத் தவறியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் தங்களது விடைகளில் இந்தப் பகுதிக்காக அவதானிப்பு, பகுப்பாய்வு நடைமுறைகள் மற்றும் உறுதிப்படுத்தல் அழைப்பு போன்ற விடைகளை அளித்திருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு மிகக் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

பகுதி (c) (ii) இல், தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளும்போது கவனஞ் செலுத்த வேண்டிய மூன்று பகுதிகளை அடையாளங் காண எதிர்பார்க்கப்பட்டது. பரீட்சார்த்திகள் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை, கொள்வனவுப் பகுதி, நிலையான சொத்துக்கள் கட்டுப்பாட்டு முறைமை போன்ற அதிகளவான சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். இது, இடர் மதிப்பீடு மற்றும் நடைமுறை விவரணத்திற்கு அறிவைப் பிரயோகித்தல் என்பவற்றில் பரீட்சார்த்திகள் போதுமான அறிவைக் கொண்டிருக்க வில்லை என்பதையே காட்டுகிறது.

**வினா இல. 10** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

பரீட்சார்த்திகள் இந்த வினாவின் பகுதி (a) தவிர்ந்த மற்றப் பகுதிகளில் ஓரளவு திருப்திகரமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

இந்த வினாவின் பகுதி (a) இல், நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் தொடர்ந்து இயங்கும் என்ற ஊகத்தைச் சந்தேகத்திற்கு உள்ளாக்கக்கூடிய நிதிசார் நிகழ்வுகள் அல்லது புறநிலைகள் மீதான அறிவு பரீட்சகரால் பரீட்சிக்கப்பட்டது. இங்கு, தொடர்ந்து இயங்கும் என்ற ஊகத்தை சந்தேகத்திற்கு உள்ளாக்கக்கூடிய நிதிசார் நிகழ்வுகள் மற்றும் புறநிலைகளைக் கூறுமாறு விசேடமாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இந்த வினாவுக்கு விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் நிகழ்வுகளைத் தவிர்த்து இயக்கம் சார்ந்ததும் ஏனைய புறநிலைகளையும் எழுதியிருந்தனர்.

பகுதி (b) Flex Plastic (Pvt) Ltd. பற்றிய விவரணத்தை அடிப்படையாகக் கொண்ட வினாவாக இருந்தது. பகுதி (b) (i) இலிருந்து, கணக்காய்வு நடைமுறைகளின் ஒரு வகையான ‘‘அவதானித்தல்’’ என்பதின் விளக்கமும் ஒரு கணக்காய்வு நடைமுறையாக ‘‘அவதானித்தல்’’ என்பதன் வரையறைகளும் பரீட்சகரால் எதிர்பார்க்கப்பட்டன. அதிகமான பரீட்சார்த்திகள் பகுதி (b) (i) இற்கு நல்ல பதில்களை வழங்கியிருந்தனர்.

பகுதி (b) (i) இல், 2015.03.31 ஆந் திகதியில் இந்தக் கம்பனியின் தொக்குகள் மீதான கணக்காய்வு ஆதாரங்களைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பகுப்பாய்வு நடைமுறைகள் பற்றிய அறிவு பரீட்சகரால் பரீட்சிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் பகுப்பாய்வு நடைமுறைகள் பற்றிய தெளிவான யோசனைகள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பரீட்சார்த்திகள் பௌதிக தொக்குச் சரிபார்ப்பு, எடையேற்றிய சராசரிக் கிரயத்தின் கணிப்பீடு, ஆவணங்களின் பரிசீலனை போன்ற முழுமையற்ற அல்லது சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

முடிவடைந்த நிதியாண்டில் மூலப் பொருட்களின் துல்லியமான மதிப்பினைச் சோதிப்பதற்கான கணக்காய்வு நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த பகுதி b (iii) இற்குப் பல பரீட்சார்த்திகள் விடையளிக்கவில்லை. விலைப்பட்டியலைச் சோதித்தல், மீள எண்ணுதல் போன்ற சம்பந்தமற்றதும் முழுமையற்றதுமான விடைகள் இதற்கு உதாரணங்களாகும்.

இந்த வினாவின் பகுதி (c) யானது, வியாபார வருமதிகள் மீது கனிஷ்ட கணக்காய்வாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட வேலைத்தாள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இங்கே பகுதி (C) (i) வினாவானது, தரப்பட்ட விவரணத்தில் குறிப்பிடப்பட்ட வருமதியாளர்கள் உறுதிப்படுத்தல் செயன்முறை மீது கனிஷ்ட அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளின் போதுமான தன்மை தொடர்பிலான குறைபாடுகளை விளக்கக் கோரியது. பரீட்சார்த்திகள் அடையாளங் காணப்பட்ட குறைபாடுகளை விளக்குவதற்குப் பதிலாக ‘‘உறுதிப்படுத்தல் செயன்முறைக்கு மேலாக முறையான கட்டுப்பாடுகள் இல்லை’’ என்பன போன்ற விடைகளையே தந்திருந்தனர்.

பகுதி (c) (ii) இல், தரப்பட்ட வேலைத் தாளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை அடையாளம் காணுதல் மீதான அறிவை பரீட்சகர் சோதித்துள்ளார். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

அதிகமான பரீட்சார்த்திகள் வேலைத் தாள் தயாரிப்புத் திகதி குறிப்பிடாமை, உறுதிப்படுத்த அனுப்புவதற்கான மாதிரித் தெரிவின் அடிப்படை ஆவணப்படுத்தப்படாமை, வேலைத் தாள் தொடர்பு கிடைத்திருக்காமை போன்ற ஆவணப்படுத்தல் பிரச்சினைகளை குறிப்பிட்டு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

- - -

**<u>தேர்ச்சி மட்ட மேம்பாட்டிற்காக கருத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u> :**

(1) முழுமையான பாடத்திட்டத்தையும் ஆழமாகக் கற்றல்

(2) வினாவினை பல தடவைகள் வாசித்த பின் அங்கு குறிப்பிட்டதும் நேரடியானதுமான விடைகளை எழுத எதிர்பார்க்கும் சந்தர்ப்பங்களில் தேவையற்ற விளக்கங்கள் / விபரங்களை எழுதுதல் கூடாது.

(3) இந்தப் பாடத்துடன் தொடர்புபட்ட புத்தகங்கள், கையேடுகள், கடிதங்கள், சஞ்சிகைகள் மற்றும் கணக்காய்வுடன் தொடர்புபட்ட ஏனையவற்றை வாசியுங்கள்.

(4) வரைவிலக்கணங்களுடன் கூடிய வினைச் சொல் நிரல் ஒன்று வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச் சொல்லினைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(5) விடையளிக்கும்போது ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் கோட்பாட்டு எண்ணக்கருக்களை முன்வைப்பதும் தேவையானபோது உதாரணங்களை வழங்குவதும் முக்கியமானதாகும்.

(6) கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாகவும் உரிய இடத்தில் இருப்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

(7) வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.

(8) கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளைக் கற்று உங்களது அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

(9) வினைத்திறனான நேர முகாமைத்துவம்

(10) விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் விடை இலக்கங்கள் சரியான இடங்களில் இடப்பட்டுள்ளதா என்பதை முறையாகப் பரீட்சிக்கவும்.

(11) நல்ல முன்னேற்பாடு மற்றும் பரீட்சையில் சித்தியடையும் மிகுந்த எதிர்பார்ப்புடன் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -